**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI**
**OS No.148/2019**

**2024** ம் வருடம் டிசம்பர் திங்கள் 26 ம் நாள் வாதி தரப்பில் 1 வது சாட்சியத்தின் வாக்குமூலம் 1873 ம் ஆண்டு 10 வது விதியின் படி திருமதி.சேதுராணி, உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் : திரு.உமையவேல் (PW1)

தந்தை / கணவர் பெயர் :

தொழில் :

வயது :

<u>வாதி தரப்பில் முதல் விசாரணை</u>:

1. நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகளை படித்துப் பார்த்து கையொப்பம் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தை எனது முதல் விசாரணை வாக்குமூலமாக ஏற்றுக்கொள்ள பிராத்திக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

2. கடந்த 20.02.2017 ம் தேதியன்று எனக்கும், 2 ம் பிரதிவாதிக்கும் சந்திரசேகரன் என்பவர் எழுதிக்கொடுத்த கிரைய ஆவண எண்.127/2017 ன் அசல் வா.சா.ஆ.1 ஆகும்.

3. தாவா சொத்தைப் பொறுத்து சக்கம்மாள் மற்றும் வையம்மாள் பெயரில் உள்ள பட்டா எண்.824 ன் கணிணி நகல் வா.சா.ஆ.2 ஆகும்.

4. இராமநாதபுரம் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் இருந்து எனக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையின் சார்பு நகல் வா.சா.ஆ.3 ஆகும்.

5. தாவா சொத்திற்காக வில்லங்க சான்று வா.சா.ஆ.4 ஆகும்.

6. தாவா சொத்திற்குரிய அடங்கல் பதிவேட்டின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5 ஆகும்.

பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

ஓம்/J.சங்கீதா
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி (மு.கூ.பொ)